REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 30உ வெள்ளி (12—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 1உ சனி (13—4—57) [இதழ் 261

# மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள நாம்!

## 'பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும்'

## கான்ஸ்டபிள் ஆன கந்தசாமியும் எம்.எல்.ஏ. ஆன கழகத் தோழரும்!

## வெற்றிபெற்றோரது கடமைகுறித்து அண்ணா அறிவுரை

கந்தசாமி—ஒரு குடும்பத்தின் மூத்த பிள்ளை—கான்ஸ்டபிள் ஆகிவிட்டதாலேயே குடும்பப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதல்ல; அதுபோலவே, கழகத்தவரில் 15 பேர் எம். எல். ஏ. ஆகிவிட்டதாலேயே பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாக ஆகிவிடாது.

கான்ஸ்டபிள் ஆன கந்தசாமி, உத்தியோகத்திலும் குடும்பத்திலும் நடந்துகொள்ள வேண்டிய முறை என்ன? அதேபோல, மூத்த பிள்ளை கான்ஸ்டபிள் ஆகிவிட்டதாலேயே குடும்பத்தவர் எது வேண்டுமானாலும் செய்யலாமா?

இப்படி அழகிய உவமையணியில், வெற்றி பெற்ற தோழர்களுடையவும், கழகத்தினுடையவும் கடமையை—பொறுப்பை அண்ணா அவர்கள் வெகு அழகாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

திருவல்லிக்கேணி கூட்டம் ஒன்றில் அவர் ஆற்றிய சொற்பொழிவின் முற்பகுதி நேற்று வெளிவந்துள்ளது; இரண்டாம் பகுதியான 'தோழர்களுக்கு அவர் தந்துள்ள அறிவுரை'யைத் தருகிறோம்:—

### பெற்ற வாக்குகள் சாதாரணமானதல்ல!

"வெற்றி பெற்றிருக்கிற இடங்கள் 15 என்றால் நாட்டு மக்கள் நமக்கு அளித்திருக்கும் வாக்குகள் 16 இலட்சத்திற்கும் அதிகம்; ஆனால் சில மாற்றுக் கட்சியினர், இதென்ன, பெற்றது 15 இடங்கள்தான் என்றாலும், 16 இலட்சம் வாக்குகள் பெற்றிருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறார்களே'—என்று கேலியாகக் கேட்கலாம். அவர்களுக்குச் சொல்லுவேன்—இது சாதாரணமான பேச்சல்ல; அரசியலில் எத்தனை இடம் கிடைத்தது என்பதை பொறுத்து ஒரு கட்சியின் மதிப்பு இருக்கவில்லை. எத்தனை இடம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்தது என்பதை — எத்தனை வாக்குகள் கிடைத்தன என்ற புள்ளி விவரத்தைப் பார்த்துத்தான் ஒரு கட்சி வளருகிறதா வீழ்ச்சி அடைகிறதா என்பதை — மேல் நாடுகளில் உள்ளவர்கள்—ஜனநாயகப் பண்பறிந்தவர்கள் அதனை நன்றாகக் கவனிக்கின்றார்கள். ஆகவே, 16 இலட்சம் வாக்குகளுக்கு மேல் நமக்கு மக்கள் அளித்திருக்கிறார்கள் எனும்போது, கிடைத்த இடம் 15 என்றாலும், அளிக்கப்பட்டிருக்கிற வாக்குகள் 16 இலட்சம் என்றால், அது மறக்கத்தக்க—அலட்சியப்படுத்தத்தக்க — கேவலப்படுத்தத்தக்க சம்பவம் என்று எந்த அரசியல் அந்தகனும் கருதமாட்டான்.

"16 இலட்சம் வாக்குகள் என்றால், அது எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டுச் சொல்வேன்.

### நாமும் கேரளமாக இருந்தால்!

"சங்கரன் நம்பூதிரிபாட் என்ற கேரள கம்யூனிஸ்டுத் தலைவர் தலைமையில் மந்திரி சபை கேரளத்தில் ஏற்பட்டிருக்கிறது. கேரளத்தில் மந்திரி சபை அமைத்துள்ள கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எத்தனை ஓட்டுக்கள் கிடைத்தன 19 இலட்சம்! 19 இலட்சம் வாக்குகளைப் பெற்ற கம்யூனிஸ்டுக் கட்சி கேரளத்தில் மந்திரி சபை அமைக்கின்றது என்ற அரசியல் சம்பவத்தை ஒரு பக்கத்திலும், 16 இலட்சம் மக்கள் நமக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்ற சம்பவத்தை இன்னொரு பக்கத்திலும் வைத்துப் பார்த்தால், 3 இலட்சம் வாக்குகள்தான் வித்தியாசம் என்பது தெளிவாகும். நாமும் கேரளமாக இருந்தால்......!

### பாதகமேற்படாதவகையில் பணியாற்றுவீர்!

"ஆகையால் நாட்டு மக்கள் நம்மிடம் நல்ல நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கைக்கு எந்தவகையிலும் பாதக மேற்படாத வகையில், சட்டசபைக்கு உள்ளே செல்பவர்களும் சட்டசபைக்கு வெளியே இருக்கும் கழகத் தோழர்களும் நல்ல பொறுப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

### என்ன பொருள் அதற்கு?

"நானோ, அன்பழகனோ, ஆசைத்தம்பியோ சட்டசபைக்குச் சென்றிருக்கிறோமென்றால் — அதை நீங்கள் எப்படி கருத வேண்டுமென்றால், ஒரு குடும்பத்திலிருக்கும் மூத்த பையன் —கந்தசாமி என்று வைத்துக்கொள்வோம் — அவனுக்குக் கான்ஸ்டபிள் வேலை கிடைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; கந்தசாமிக்கு கான்ஸ்டபிள் வேலை கிடைத்துவிட்டதென்றால் குடும்பத்தின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டது என்பது பொருளல்ல; குடும்பப் பிரச்சினைகள் ஆரம்பமாகிறது என்று பொருள். அதுபோல், கந்தசாமிக்குக் கான்ஸ்டபிள் வேலை கிடைத்துவிட்டதும் குடும்பத்திற்கும் அவனுக்கும் தொடர்பில்லை என்பது பொருளல்ல; குடும்பத்தில் அவன் பொறுப்புள்ளவனாகிறான். கந்தசாமிக்குக் கான்ஸ்டபிள் வேலை கிடைத்ததுபோல் அன்பழகனுக்கு எம். எல். ஏ. ஸ்தானம் கிடைத்திருக்கிறது. கந்தசாமி கான்ஸ்டபிள் ஆனாலும் குடும்பக் காரியத்தைக் கவனிக்கவேண்டியதுபோல், அன்பழகன் எம். எல். ஏ. ஆனாலும் கழகக் காரியத்தைக் கவனிக்க வேண்டும். கவனிக்கும் நேரத்தில், கந்தசாமிக்கு, 'போலீஸ் ஸ்டேஷனில்தான் நாம் கான்ஸ்டபிள்' என்ற கவனம் இருக்கவேண்டும். தன் குடும்பத்திற்குள் நுழையும்போது 'நாம் குடும்பத்திற்கு மூத்த பிள்ளை' என்ற கவனம் இருக்க வேண்டும்—என்று கந்தசாமி கதையில் இருப்பதைப்போல், எனக்கோ அன்பழகனுக்கோ, ஆசைத்தம்பிக்கோ, சட்டசபைக்கு போனால் சட்டசபை உறுப்பினன் என்று கவனமிருக்கவேண்டும்; கழகத்திற்குள் வந்தால், கழக உறுப்பினர் என்ற கவனம் இருக்க வேண்டும்.

### கடமை உணர்வீர்!

"அதைப்போலவே, குடும்பத்திலுள்ளவர்கள் 'கந்தசாமிக்குத்தான் கான்ஸ்டபிள் வேலை கிடைத்துவிட்டதே; இனி வம்பு தும்புக்குப் போனாலும் யாரும் எதுவும் செய்துவிட முடியாது' என்று, அடுத்த வீட்டாரின் வம்பு வல்லடிக்குச் செல்லக் கூடாது.

"அதைப்போல் 'நாம்தான் 15 பேர் வந்துவிட்டோ'மே சட்டசபைக்கு; ஆகவே, எது வேண்டுமானாலும் செய்யலாம்' என்று கழகமும் கருதிவிடக்கூடாது.

"அதுபோல், 'நமக்குத்தான் கான்ஸ்டபிள் வேலை கிடைத்துவிட்டதே' என்று கருதிய கந்தசாமி, ஊராரை மிரட்டுவதுபோல் வீட்டில் மிரட்டினால்அவன்தொட்டுத் தாலிய கட்டிய மனைவியே இடித்துச் சொல்லுவாள்—'இதெல்லாம் அங்கே வைத்துக்கொள்; என்னிடத்தில் வேண்டாம்'—என்று! அதுபோல், சட்டசபை உறுப்பினர் ஸ்தானம் கிடைத்துவிட்டதாலேயே கழகத்தின் காரியங்களை கவனிக்காமல் உறுப்பினர்கள் இருந்துவிடக்கூடும் என்று நீங்கள் கருதினால், அந்த தொட்டுத் தாலி கட்டியவள் இடித்துச் சொன்னதுபோல், நாங்கள் தவறி நடந்தால்—நடக்க மாட்டோம்—நல்ல அன்புள்ள மனைவி - ஆதரவளிக்கும் மனைவி - தொட்டுத் தாலி கட்டிய மனைவி, கணவனைப் பலமாக அல்ல—அன்பாகக் கோபிப்பது போல் எங்களைத் திருத்த வேண்டும்.

"அப்படித் திருத்த உங்களுக்கு உரிமை இருக்கிறது என்பது மாத்திரமல்ல—அதற்கு உங்களுக்குப் பயிற்சியும் இருக்க வேண்டும். ஏன் பயிற்சி இருக்க வேண்டுமென்றால், நாம் தேர்தல் விஷயத்தில் புதிதாக ஈடுபட்டதாலே, அதற்கு நமக்குப் பயிற்சி இருக்க வேண்டும்.

"ஆனால், கந்தசாமிக்குக் கான்ஸ்டபிள் வேலை கிடைத்துவிட்டது என்பதாலேயே குடும்பக் காரியங்கள் தீர்ந்துவிடவில்லை என்பதுபோல், நாம் 15-பேர் சட்டசபை சென்றுவிட்டதாலேயே தி. மு. கழகப் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை."

★

[நாளை (13-4-57) இதழில், பார்ப்பன இளைஞர்களுக்கு அண்ணா தந்த அன்பழைப்பு வெளிவரும்.

## 300 உயிர்களைப் பலி கொண்ட பயங்கரப் படகு விபத்து

### இராம நவமி கொண்டாடச் சென்ற யாத்திரீகர்களுக்கு கோதாவரியில் பரிதாப முடிவு

பத்ராசலம், ஏப். 12—

சுமார் 300 உயிர்களைப் பலிகொண்ட பயங்கரப் படகுவிபத்து ஒன்று கோதாவரி நதியில் நடைபெற்றிருக்கிறது.

இரண்டு படகுகளில், பத்ராசலத்தில் இராமநவமி கொண்டாடச் சென்றுகொண்டிருந்த யாத்திரீகர்களுக்கு இந்தப் பரிதாபகரமான கோர முடிவு ஏற்பட்டிருக்கிறது.

இன்று காலைவரை மீட்கப்பட்ட பிணங்கள் 237 என்றும் மொத்தம் 300 பேர்வரை பலியாகியிருப்பர் என்றும் கூறப்படுகிறது.

### காரணம்

விபத்தில் சிக்கித் தப்பியவர்களில் ஒருவர், விபத்திற்கான காரணத்தைக் கூறியிருக்கிறார்.

குழந்தை ஒன்று படகிலிருந்து கைதவறி நதியில் வீழ்ந்ததாகவும் அதனை மீட்பதற்காகச் சில பிரயாணிகள் படகின் இப்பக்கமும் அப்பக்கமுமாக ஓடியதால் முதல் படகில் தண்ணீர் நிரம்பியதாகவும், அதன் விளைவாகப் படகு ஒருபுறம் சாயவே, பெரும் அலறலுடன் அந்தப் படகிலிருந்து பிரயாணிகள் கூடவந்த மறுபடகிற்கு ஒவ்வொருவராகத் தாவியதாகவும், இதனால் முதற் படகு குடைசாய்ந்ததுடன், மறுபடகும் கூட்டம் அதிகரித்ததால் நீரில் மூழ்கியதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

### வேறொரு காரணம்

விபத்துக்கு வேறொரு காரணமும் கூறப்படுகிறது. அதாவது, ஒரு படகிலிருந்த பிரயாணிகள், அந்தப் படகோட்டியிடம் பிரயாணக் கட்டணம் பற்றி தகராறு கிளப்பியதாகவும் அதனால் மறுபடகிற்குச் சில பிரயாணிகள் தாவியதாகவும், இதனால்தான் ஒன்றொடொன்று கட்டப்பட்டிருந்த இரு படகுகளும் கவிழ்ந்தன என்றும் கூறப்படுகிறது.

### கொளுத்தினர்

கிடைத்த பிரேதங்களை எல்லாம் அடையாளத்திற்காகப் புகைப்படம் எடுத்துக்கொண்டு அதிகாரிகள் கொளுத்திவிட்டனர் என்றும், தேடிவரும் உறவினர்களிடமும் பல பிரேதங்கள் ஒப்புவிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

### தப்பியவர்கள்

தப்பியவர்கள் சுமார் 65 பேர் மட்டுமே என்றும் கூறப்படுகிறது.

### மீட்பு வேலை

மீட்பு வேலைகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும், எப்படியும் சுமார் 60 முதல் 70 பேர் வரை நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்பட்டிருப்பர் என்று அஞ்சப்படுவதாகவும் கூறப்படுகிறது.

குடும்பம் குடும்பமாக, இராம நவமிக்காகச் சென்றவர்கள், இப்படி ஒரு கோர முடிவைப் பெற்ற பரிதாபம் சகித்துக்கொள்ள முடியாததாயிருக்கிறது.

## 'இராம நவமி'யில் கண்ணீர்ப் புகை!

### 'பக்தர்'கள்மீது தடியடி

பாட்னா, ஏப். 12—

பீகார் மாநிலத்திலுள்ள ஜாம்ஷெட்பூர்நகரத்தில்இராமர்பிறந்தின விழாவில், இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக கற்கள் வீசிக்கொள்ளப்பட்டனவாம்!

இந்த பக்தர்களின் 'லீலை'யை அடக்குவதற்கு போலீசார் தடியடியும், கண்ணீர்ப் புகையும் உபயோகித்தனராம்!

கல்வீச்சில் 30 போலீசாருக்குக் காயமேற்பட்டதாம்! ஊரில் 144-தடை உத்தரவு போடப்பட்டுள்ளதாம்!

நம் நாடு

சென்னை 12—4—57 வெள்ளி

# பொதுமக்கள் தீர்ப்பு

“தேர்தல் நேரத்தில், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சியினர், அமைச்சர்களையும் மற்ற (காங்கிரசு கட்சியினர்) வர்களையும் தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டி இழித்துப் பழித்துப் பேசுவதின்மூலம், அரசியல் சட்டத்தின்கீழ் தாங்கள் பெற்றுள்ள பேச்சுரிமையை வரம்புமீறித் தவருகப் பயன்படுத்தினர். இதைத் தடுக்கும்வகையில் தேர்தல் விதிகள் திருத்தப்பட வேண்டும்.”

இவ்வாறு நெஞ்சு நொந்து கூறி இருப்பவர் ஒரு சிறந்த அறநெறிக் காப்பாளராகத்தான் இருக்க வேண்டும் என்றே அனைவருக்கும் எண்ணத் தோன்றும். நாமும் அப்படித்தான் துவக்கத்தில் கருதினேம்.

இப்படியா, அரசியல் சட்டத்தின் மூலம் பெற்றுள்ள அருமையான பேச்சுரிமையைத் தவருகப் பயன்படுத்துவது?— இதற்கா அப்பேச்சுரிமை வழங்கப்பட்டிருக்கிறது? என்றெல்லாம்நாம் எண்ணிக் கவன்றேம்.

அமைச்சர்களைத் தனிப்பட்டமுறையில் தாக்கிய அரசியல் தூர்த்தர் யார்? அவர் எக்கட்சியைச் சார்ந்தவர்? அத்தகு தூற்றலுக்கு ஆளாக்கப்பட்ட அமைச்சர் பெருந்தகை யார்? என்பனபோன்ற பற்பல வினுக்கள் நமது சிந்தனையைக் குழப்பின.

ஆனல், அவ்வாறு குறைபட்டுக்கொண்ட அமைச்சர், கோயில்பாளையம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிகண்ட சுப்பிரமணியம் அவர்களாவர் என்பதைத் தெரிந்து கொண்டதும், இவரா நியாயம் பேசுகிறர்? இந்தக் குணளரா, எதிர்க்கட்சியினர் தங்களைத் தனித்த முறையில் தாக்கிப் பேசிவிட்டதாகக் கவல்கிறர்? இதென்ன விபரீதம்? என நம்மை நாமே கேட்டுக் கொண்டோம்.

காங்கிரசு அமைச்சர்களைத் தனிப்பட்ட முறையில் அவதூருகத் தாக்கிப் பேசின எதிர்க்கட்சியினர் எவராக வேண்டுமானுலும் இருக்கட்டும். அவர்களைப் பற்றியும், அவர்கள் பேசிய பேச்சைக் குறித்தும் அதிலுள்ள ஏசலைப் பற்றியும் நாம் அறிய முயற்சிப்பதற்குமுன், இந்தக் காங்கிரசு அமைச்சர்கள், தாங்கள் ஆற்றிய தேர்தல் பிரச்சாரத்தைத் தனி நபர்களைத் தாக்கிப் பேசாது கண்ணியமான முறையில், மற்றவர்களும் பின்பற்றத் தக்கவகையில் மேற்கொண்டார்களா என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

தேர்தல் விதிகள் ஆணையிட்ட வழியைப் பின்பற்றியும், அதே விதிகளால் குற்றமென சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் ஒழுக்கக் கேடுகளை நெஞ்சினுல் தீண்டாதும், எந்தஅளவு இந்த அமைச்சர்கள் தங்களுக்கு வெற்றி தேடி இருக்கின்றனர் என்பதும் ஆராய்ந்துணரத்தக்கதாகும்.

தேர்தலுக்குமுன் இந்தூர் காங்கிரசு மாநாட்டில், தனிப்பட்டவர்களைத் தாக்கிப் பேசக்கூடாது, ஆத்திரமூட்டும்படி ஆபாசமாக ஏசக்கூடாது, அரசியல் அறிவைப் போதிக்கக் கிடைத்த வாய்ப்பாகத் தேர்தல் பிரசாரத்தைப் பயன்படுத்த வேண்டும்; சாதனைகளைக் கூற வேண்டும், சாதிக்க இருப்பவைகளை விளக்கவேண்டும், என்றக் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கி நிறைவேற்றப்பட்டத் தீர்மானத்தை, எந்த அளவுக்கு மதித்து நடந்துகொண்டார்கள் இக்காங்கிரசு அமைச்சர்கள் என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

இவ்வளவையும், வழிகாட்டிகளாகக் கொண்டு, கனம் சுப்பிரமணியம் உள்பட காங்கிரசு அமைச்சர்களும், காங்கிரசு உறுப்பினர்களும், தேர்தலில் ஆற்றிய பிரசாரத்தையும், வெற்றிபெற கையாண்டச் செயல்களையும் ஆராய்ந்து பார்த்தால், இவர்கள் அனைவரும் பெற்றுள்ள தேர்தல் வெற்றி செல்லத் தகாததாகவல்லவாபோய்விடும்! வாயடைத்து, செயலற்று, வெட்கத்தால் தலைகவிழ வேண்டிய கட்டாயத்திற்கல்லவா இவர்கள் அனைவரும் வந்தாக வேண்டும்?

தங்களிடம் சிக்கிக்கிடந்த அதிகாரத்தைத் தங்கள் வெற்றிக்காகக் கடுகளவும் பயன்படுத்தவில்லை என்று, இக்காங்கிரசு அமைச்சர்கள் கூறத்துணிவார்களா? சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள சில ஆயிரம் ரூபாயை மட்டுமே செலவிட்டுத்தான் இவர்கள் ஒவ்வொருவரும் வெற்றி பெற்றதாகக் கூற, இந்த அமைச்சர்களுக்குத் துணிவுண்டா?

அமைச்சர் அழகேசனர், தனது தொகுதியில், தேர்தலில் கலந்துகொண்ட மாற்றுக் கட்சி அபேட்சகர்களை, அதிலும் குறிப்பாக மக்களால் உயிரினும் உயர்வாக மதிக்கப்பட்டு வரும் நம் அரும் வழிகாட்டி அண்ணவை, தனித்த முறையில் தகாத வார்த்தைகளால் அர்ச்சிக்கவில்லை என்று, இந்த அமைச்சர்களால் சொல்ல முடியுமா? அமைச்சரின் பிரச்சார இலட்சணமே இதுவானல், அங்குள்ள தேர்தல் கால எடுபிடிகளின் பிரச்சாரம் எப்படி இருந்திருக்கும் என்பதை விளக்கவா வேண்டும்?

தேர்தல் விதிகள் சிறந்தவைதான். உயர்ந்த இலட்சியங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பவைகள்தான். இருந்தால் என்ன? தேர்தல் விதிகளுக்கு மதிப்புவைத்து நடந்து மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கவேண்டிய பொறுப்பும் கடமையும் கொண்டுள்ள அமைச்சர்களே, அவ்விதிகளை உடைத்தெறிந்து, தங்களுக்கு வெற்றியைத் தேடிக் கொள்ளுவதில் முதல் வரிசையில் வரிந்து கட்டிக்கொண்டு நின்றிருந்தார்கள் என்ருல், அதைவிட நாட்டுக்கு ஏற்படக்கூடிய பெருங்கேடு எதுவாக இருக்கமுடியும்?

இதுவே, இவர்கள் தேர்தல் செயல்முறை, பிரச்சாரபோக்கு வெற்றி இரகசியம்பற்றிய பொதுமக்களின் தீர்ப்பு.

இப்பொதுமக்களின் தீர்ப்பிலிருந்து, இன்று தப்பித்துக் கொண்டு வெற்றி வீரர்களாக காங்கிரசு அமைச்சர்கள் பவனி வந்தபோதிலும், எதிர்காலத்தில் தப்ப முடியாது என்பதை இவர்கள் அறிந்துகொள்வார்களாக.

தேர்தல் குற்றவாளிகள் என்ற பொதுமக்கள் தந்தத் தீர்ப்பைத் தாங்கள் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டிருக்கும் நிலையிலேயே, அதே குற்றத்தை மற்றவர்கள் செய்திருப்பதாகவும், அதை கட்டுப்படுத்தத் தேர்தல் விதிகளைத் திருத்தவேண்டும் எனக் காங்கிரசு அமைச்சர்கள் பேச முன்வருவதும், அழிரணத்தில் பிறந்தபுழு உடல் நலம் பற்றி போதிக்க முன்வருவது போன்ற நகைச்சுவையேயாகும்.

# ‘இருக்கு வேத காலத்திற்கு முந்தியதே மோகஞ்சதாரோ நாகரிகம்’

## நிர்வாக இலட்சணம்?

நாகர் கோயில், ஏப். 12—

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத்தின் போக்குவரத்து இலாகாவிற்குச் சொந்தமான 76 பஸ்களில் தினசரி குறைந்தது 54 பஸ்கள் ஓடித்தீர வேண்டியுள்ளதாம்; ஆனல், பஸ்கள் சரிவரப் பழுது பார்க்கப்படாத காரணத்தினல் அடிக்கடி நின்று போகின்றனவாம்.

சுமார் 35 பஸ்கள், போக்குவரத்திற்கே இலாயக்கற்றநிலையில் உள்ளதாம்! இது சம்பந்தமாக இலாகா மூலம் சென்னை அரசாங்கத்திற்கும் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாம்.

பஸ் நிலயத்தில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியும், குடிதண்ணீர் வசதியும், ஒதுங்கும் இடங்களுக்கான வசதிகளும் செய்யப்படவில்லை என்பதையும் சென்னை அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

## அல்மோரா மாவட்டத்தில் ஈயப் படிவங்கள்

### அழிந்துவிட்ட தொழிலுக்குப் புத்துயிர் கிடைக்கும்?

புதுடில்லி, ஏப். 12—

உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள அல்மோரா மாவட்டத்தில் சுமார் 1½ மைல் தூரத்திற்கு ஈயப் படிவங்கள் இருப்பதாக இந்திய பூகர்ப்ப ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்துள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தப் படிவம் 200 கெசம் முதல் 500 கெசம்வரை அகலம் உள்ளதாக அமைந்திருக்கிறதாம்.

இந்த ஈயக் கனியில், வெள்ளியும் கலந்துள்ளதாம்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னரே இங்கு செம்பு, ஈயம், உருக்குத் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளதாம்.

அந்நியன் ஆட்சியில் இந்தத் தொழில் அழிந்துவிட்டதாம்!

## வெளியேறியவர்கள் மீது பாய்ச்சல்!

### காங்கிரஸ் தலைமையின் போக்கு

காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்டதற்காக 11 முன்னள்காங்கிரஸ்காரரையும் எதிர்த்து வேலை செய்ததற்காக 2 காங்கிரஸ்காரர்களையும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ‘சஸ்பெண்ட்’ செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சமயத்தில் 60 காங்கிரஸ்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மொத்தம் 71 பேர்மீது காங்கிரஸ் தலைமை நடவடிக்கை எடுத்துள்ளது.

## ‘உண்மையைத் திரித்துக் கூறி தொன்மைக்கு இழிவு தேடாதீர்’

“பேராசிரியர் ஹீராஸ் பாதிரியாரும், தென்னிந்திய மக்களின் தொன்மையான நாகரிகம் சிந்து நதிப் பிரதேசத்திலும் அதற்கு அப்பாலும் பரவியிருந்த சான்றுகளை அடுக்கடுக்காகக் குறிப்பிட்டுள்ளார்.

“மோகஞ்சதாரோவிலும், ஹாரப்பாவிலுமிருந்த நாகரிகம் ஆரியர்களுடையது என்பது மிகவும் தவருனது என்றும், ஆரியர்கள் இந்தியாவில் குடியேறுவதற்கு அதிக காலத்திற்கு முன்னமேயே தென்னிந்திய மக்களின் நாகரிகம் அங்கு வேரூன்றி இருந்ததென்றும், இவ் வரலாற்றுப் பேராசிரியரும், பழம்பொருளாராய்ச்சி நிபுணரும் சான்றுகளுடன் நிரூபித்திருக்கிறர்.

“இச்சான்றுகளுக்குப் பல காலம் பிற்பட்டவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு, சிந்து மாநிலப் பகுதியின் நாகரிகம் இருக்கு வேத காலத்தைத்தான் சேர்ந்தது என்று வாதிப்பது வரலாற்று உண்மைகள், பழம்பொருளாராய்ச்சியின் முடிவுகள் முதலியவற்றையே அவமதிப்பதாகும்”

இவ்வாறு, ‘ஆராய்ச்சியின் அடிப்படை’ என்ற தலைப்பில், 5—4—57 ‘தமிழ்நாடு’ இதழ் குறிப்பிட்டுவிட்டு, அதன் காரணகாரியங்கள்பற்றி எழுதியிருப்பதாவது:—

“சிந்து நதிப் பள்ளத்தாக்கிலுள்ள ‘மோகஞ்சதாரோ’ ஹாரப்பா ஆகிய நாகரிக நகரங்களைக் குறித்து ஒரு சுவையுள்ள ஆராய்ச்சிக் குறிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புராதன நாகரிகம் ‘இருக்கு வேதகாலத்தைச் சேர்ந்தது; இதற்கு உரிமையாளர்கள் ஆரியர்கள்’ — என்று பழம் பொருள் ஆராய்ச்சித் துறையின் துணைத் தலைமை ஆணையாளராகிய திரு. டி. என். இராமச்சந்திரன் கூறியிருக்கிறர்.

“தென்னிந்திய பழம் பொருளாராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட இக்கருத்து, இந்திய நாகரிகத்தின் தொன்மையைக் குறைவு படுத்துவதாயிருக்கின்றது.

“ஏனென்ருல், மேற்கு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம், இருக்குவேத காலத்திற்கும் முற்பட்ட மிகமிகப் புராதனத் தன்மைவாய்ந்தது’ என்று ஆராய்ச்சிச் சான்றுகளுடன் விளக்கிக் கூறியிருக்கிறர்கள்.

“மோகஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட புராதனப் பொருள்களின் தொன்மையைவிட, ஹாரப்பாவின் ஒரு பகுதியில் தோண்டப்பட்ட பொருள்கள் மிகுந்த பழமையைக் காட்டுகின்றன என்பது அவர்களுடைய கருத்து.

“இவ்விதமாகப் பழமைத்தன்மையிலும் தொன்மை வரலாற்றிலும் ஒன்ருேடொன்று போட்டியிடும் தன்மையில் அமைந்திருந்த நாகரிகங்கள் என்று கூறும் பிறநாட்டு ஆராய்ச்சியாளர்கள் சான்றுகளையும் புறக்கணிப்பது நம்முடைய நாட்டிற்குச் செய்யும் நல்ல தொண்டாகுமா?

“இந்தியாவில் முன்னர் பழம் பொருள் ஆராய்ச்சித் தலைமை ஆணையாளராக இருந்த சர்ஜான் மார்ஷல் என்ற நிபுணரும், இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிலைய ஆணையாளராகிய பேராசிரியர் எச். ஹீராஸ் பாதிரியாரும், சென்னைப் பல்கலைக் கழக இந்திய வரலாறு பழம் பொருளாராய்ச்சி ஆகியவற்றின் பேராசிரியராகிய திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரும், லக்னே பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியரான டாக்டர் இராதா குமத் முகர்ஜியும், வேறு சில பொதுநோக்குள்ள ஆராய்ச்சி நிபுணர்களும் இத்தொன்மைச் சான்றுகளைப் பாராட்டி வலியுறுத்தி வந்துள்ளனர்.

“பேராசிரியர் கார்டன் சைல்டு இந்நாகரிகத்தின் பழமையைப் பற்றித் ‘தொன்மையின் அமைப்பு’ என்ற கட்டுரையில் விளக்கிக் கூறியிருக்கிறர்— ‘எகிப்திலுள்ள ‘பிரமிட்’ என்ற கோபுரங்களுக்கு எவ்வளவு பழமையும் போற்றத்தகுந்த பெருமதிப்பும் உள்ளனவோ, அத்தன்மை இந்நாகரிகத்திற்கும் உரித்தானது; இதனுடைய செல்வமும் கலையும் பண்டை எகிப்திற்குச் சமமானது என்று கூறலாம்’ —என்பது அவருடைய கருத்து.

“மேற்கு நாடுகளில் பஞ்சுத்துணி தோன்றுவதற்கு மூன்றுயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே, சிந்துநதிப் பள்ளத்தாக்கிலுள்ள மக்கள் அத்துணியைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள்— என்று, சர். ஜான் மார்ஷல் கூறியிருக்கிறர்.

“வரலாறு தோன்றுவதற்கு முற்பட்ட எகிப்து, மெசபொடேமியா, மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளைவிட, சிந்து நதிப் பிரதேச நாகரீகத்தில் ஒரு மாபெரும் சிறப்பு காணப்படுவதை அவர் குறிப்பிட்டிருக்கிறர் — ‘அந்நாடுகளில் மாபெரும் ஆலயங்கள், மன்னர் மாளிகைகள், அரசர்களுடைய கல்லறைகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு பெரும் பொருளும் அதிகச் சிந்தனையும் பயன்படுத்தப்பட்டன. ஆனல், சிந்து நதி நாகரீகத்தில் நாட்டிலுள்ள பொதுமக்களின் வசதிக்காக மிக மிக அழகிய கட்டிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன’ — என்று அவர் பாராட்டியிருக்கிறர்.

“தென்னிந்தியாவின் சிறப்பான சமயங்களுள் ஒன்ருன சைவம், ‘கால்கோலாத்திக் காலம்’ என்ற மிகப் புராதன மனிதப் பருவத்தைச் சேர்ந்ததென்றும், உலகத்தில் இப்போதுள்ள சமயங்களெல்லாவற்றிலும் பழமையானது சிந்து நதிப் பிரதேசத்து மக்களின் சமயமாகிய சைவம்தான் என்றும் சர். ஜான் மார்ஷல் மிகவும் விளக்கமாக வற்புறுத்தியிருக்கிருர்.

“இத்தகைய தவருன கருத்துக்கள் நிலவவிடாமல் தடுத்து, உண்மையை விளக்குவது பழம்பொருளாராய்ச்சியாளர்கள் தம்முடைய கலைக்கும், நாட்டுக்கும், உண்மைக் குறிக்கோளுக்கும் செய்யவேண்டிய ஒரு முக்கியமான கடமையாகும்.”

## தன்மானம் தழைக்கிறது!

சந்திகார், ஏப். 10—

வடநாட்டில் அலுவலக ஏவலாளரை ‘சப்ராசி’ என்று அழைக்கப்படுகிறது. இனிமேல் இந்த வார்த்தையை விட்டுவிடவேண்டும் என்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இனி ஏவலாளரை ‘தோழன்’ எனும் பொருள்படும் ‘சாந்தி’ என்ற பெயரில் அழைக்கப்படுவார்கள்.

# ‘பெற்றுச் செல்லும் வரிகளில் அதிக பங்கு கொடு’

## மத்திய சர்க்காரை ம. பி. மாநில சர்க்கார் வற்புறுத்தும்

மத்திய சர்க்கார் பெறுகிற வரிகளில் அதிகப் பங்கு கேட்பதென மத்தியப் பிரதேச மாநில சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

மேலும், மானியமாகத் தரும் உதவியையும் அதிகமாக்க வேண்டுமென்றும் வற்புறுத்துமாம்.

விசாரணைக்காக இங்கு வந்துள்ள நிதிக் கமிஷனிடம், இந்தக் கோரிக்கைகள் வற்புறுத்தப்படும் என்று தெரியவருகிறது.

### வளம் உண்டு

மாநிலத்தில் ஏராளமான கனிப் பொருள்கள், மூலப் பொருள்கள் உண்டு; அவை எல்லாம் நன்கு பயன்படுத்தப்படலாம்.

மேலும், மாநிலத்தில் மிக மோசமான பின்தங்கிய நிலையில் உள்ள பிரதேசங்களும் இருக்கின்றன. இந்த அடிப்படையைக் காரணமாகக் காட்டியே மேற்சொன்ன கோரிக்கைகளை ம. பி. சர்க்கார் வற்புறுத்துமாம்!

### வளமான மாநிலமாகுமாம்

மாநில புனரமைப்புக் குழுவினரே, ‘புதிய மத்தியப் பிரதேச மாநிலம் செழிப்பான விவசாயமும், வளமான தொழில்களுமுடையதாகவிளங்கும்’ என்று கூறியிருக்கிறார்கள்.

அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில், மத்திய மாநில சர்க்கார்கள் செலவிடக்கூடிய பணம் கணிசமானதாக இருக்கும் என்பதால் அதிகமான வேலை வாய்ப்புகளும், வருவாய்களும் மக்களுக்கு கிடைக்கலாம். எனவே, இந்தியாவில் மிக வளமான மாநிலங்களுள் ஒன்றாக மத்தியப் பிரதேச மாநிலம் திகழ முடியும் என்றும் மாநில புனரமைப்புக் குழுவினர் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

இதையும் காட்டி, ம. பி. மாநில சர்க்கார் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவராம்.

# ‘கடவுள் - சுவர்க்கம் - நரகம்’ என்ற கூற்று!

## ‘வெறும் கற்பனைகள்தான்’ என்கிறது செஞ்சீனு!

கடவுள், சுவர்க்கம், நரகம் என்ற கூற்றுகள் எல்லாம் வெறும் கட்டுக் கதைகள்—பொய், என்று பீகிங் ரேடியோ கூறியதாக செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

“இந்தப் பிரச்சினைகள் உண்மையில் ஒருக்காலும் இருக்கவில்லை. இவை எல்லாம் வெறும் புரட்டுத்தனமான கற்பனை; சிந்தனைகளின் விளைவுகளாகும்” என்றும் இந்த வானொலிப் பேச்சு கூறியிருக்கிறது.

மதத்தின் ‘அறிவுக்கு அப்பாற்பட்ட கற்பனை’களை பற்றியும் அது குறிப்பிட்டது.

முக்கியமாக மாணவர்களுக்காக நடத்தப்படும் ‘மார்க்சிசம் - லெனினிசம்’ பற்றிய அநேக சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் இது ஒன்ருகும்.

# தேர்தலில் சாதி உணர்வு பெற்ற பங்கு

## டாக்டர் ராதாகிருஷ்ணன் மதிப்பீடு

புதுடில்லி, ஏப். 12—

“இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்து 10 ஆண்டுகளாகியும் பிளவு மனப்பான்மையும் மனக்கசப்பும் நிலவுகிறது; நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜாதி, வகுப்பு உணர்ச்சிகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன; பிற்போக்கு மனப்பான்மை தலை தூக்கி நின்றன.

“இந்தியாவில் புதிய ஜனநாயக சமுதாயத்தை நாம் உருவாக்குகையில் தனி மனிதன் பூரண முக்கியத்துவம் பெறுவது அவசியமாகும்; இல்லையேனில் மனிதனின் கீழ்மைக் குணங்கள் உச்சத்துக்கு வந்து கொடுங்கோல் ஆட்சியை ஏற்படுத்திவிடும்.

“முன்காலத்தில் உயர்ந்த பதவிகளில் இருந்தவர்களிடையே இலஞ்சமும் நாணயக் குறைவும் இருந்ததும், தேசீய ஒற்றுமையின்மை நிலவியதும் நாட்டிற்குப் பெருங்கேடுகளாக இருந்தன. அந்தக் கேடுகள் ஒழியாவிட்டால் நம் எதிர்காலம் நன்ருக உருவாகாது.

“மனிதப் பண்பு சேவ்வையாக உருவாவதற்கு முயற்சிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. ஏனென்ருல், ஒழுங்கு நிலைக்கும் குழப்ப நிலைக்கும் இப்போது இருந்துவரும் தூரம் அதிகமில்லை,”

—இவ்வாறு இந்திய இரயில்வேக்கள் புகைப்படக் கண்காட்சியை புதுடில்லியில், துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

“இரயில்வேக்கள் காலத்தையும் தூரத்தையும் சுருங்கவைத்துவிட்டன என்றும், இந்தியாவில் அவை ஜாதிப் பிரிவினைகளைக் கடந்து ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு வழிசெய்துள்ளதென்றும் அவர் கூறினர்.

### மனித குலத்தை அழிக்கும் கருவியா மனிதன்?

உலகத்தில் இப்போது நிலவி வருகிற சூழ்நிலையை விவரித்துவிட்டு, அவர் மேலும் கூறியதாவது :—

“முற்போக்கான நாடுகள் அணுகுண்டு உற்பத்திப் போட்டியில் ஈடுபட்டுள்ளன; இந்த அபாயகரமான ஆயுதப் பரிசோதனையில் விஞ்ஞானிகளின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் தீவிரமாய் ஈடுபட்டால், மனிதன், மனித குலத்தை அழிப்பதற்குக் கருவியாகிவிடுவான். இந்தப் பைத்தியக்கார முயற்சியின் காரணமாக மக்கள் முழுக்க மனோ நோயுற்றவர்களாகிவிடுகிருர்கள்.

### தியாகம் செய்யும் நாடு ஒன்றுகூடவா இல்லை?

“அணுகுண்டுப் போட்டியில் ஈடுபட்டுள்ள நாடுகளில் ஏதாவதொன்று நிபந்தனையற்ற முறையில் தானகவே பரிசோதனைகளை நிறுத்திக்கொள்ள முன்வரக்கூடாதா? அந்தத் தியாகத்தைச் செய்யும் பெருந்தன்மையுள்ள நாடு ஒன்றுகூடவா இருக்கக்கூடாதா?

“ஆத்ம ஒளிமூலமே மனித சமுதாயம் இந்த அணு சகாப்தத்தில் புனர்வாழ்வுபெற முடியும்; நம்பிக்கை இழக்கவேண்டிய அவசியமே இல்லை.”

# இலங்கைத் தமிழருக்கு உரிமையற்ற வாழ்வாம்

## இந்தியப் பேரரசின் அலட்சியப்போக்கால் விளையும் விபரீதங்கள்?

புதுடில்லி, ஏப். 12—

இலங்கையில் வாழும் இந்தியர்களை இலங்கையில் வசிப்பவர்களாகப் பதிவு செய்துகொள்ளவும், அவர்கள் விருப்பப்படி ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பிரயாணம் செய்யவும், ‘பாஸ்போர்டு’டன் இந்தியாவுக்குச்சென்று வரவும் இலங்கை அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும், ஆனல் அவர்களுக்கு வாக்குரிமையோ, அரசியல் அந்தஸ்தோ தர கண்டிப்பாக மறுத்துள்ளதாயவும் தெரியவருகிறது.

இதுவரையில் 4 இலட்சம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனவாம். தற்போது இலங்கையில் 1½ இலட்சம் பேர் தற்காலிக அனுமதி பெற்று வாழ்கின்றனராம்.

1955-ல் சுமார் 10,500 மனுக்கள் ஏற்கப்பட்டன; ஆனல், 1956-ம் ஆண்டில் 4,500 மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டனவாம்.

மனுக்கள் நிராகரிக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதாம். வேண்டுமென்றே அற்ப காரணங்களுக்காகக்கூட மனுக்கள் நிராகரிக்கப்படுவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

# வணிகத் துறையில் போதிய விளம்பரம் செய்யவில்லையாம்!

## அமெரிக்காவில் இந்திய கைத்தறி மார்க்கெட் நிலைபற்றி அதிகாரி விளக்கம்

சென்னை, ஏப். 12—

“இந்தியாவில் உற்பத்தியாகும் பல நிறமுள்ள சிலவகைக் கைத்தறித் துணிகளுககு அமெரிக்காவில் கிராக்கி குறைந்து வருகிறது. இந்த ரகத் துணிகளின் நிறத்தையும், தரத்தையும் முன்னேற்ருவிட்டால் அமெரிக்காவில் இத்துணிகளுக்கு மார்க்கெட் கிடைப்பது அரிதாகிவிடும்.

“அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகம், வணிகத் துறையில் போதிய அளவு விளம்பரம் செய்யவில்லை என்பதை ஒப்புக்கோள்கிறேன்”

இவ்வாறு, வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தின் பொருளாதார ஆலோசகர் திரு பி. கோவிந்தன் நாயர் ஆந்திர வணிகர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியதாவது :—

“கைத்தறித் தொழிலை நன்கு வலுப்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு மார்க்கெட்டுகளின் அன்ருட நாகரிகத்தைப் பற்றியும் அவ்வப்போது தெரிந்துகொண்டு யோசனைகள் கூறவும் ஒரு நிலையம் நிறுவவேண்டுவது உடனடித் தேவையாகும்.

“கையாலேயே துணிகள் நெய்யப்படுவதால் ஒரு குறிப்பிட்ட நீளம், அகலமுள்ள துணிகளையே நல்ல தரத்துடன் நெய்ய இயலும். அமெரிக்கர்கள் விரும்பும் 100 கெச நீளமுள்ள துணியை ஒரே மூச்சில் நெய்வது சாத்தியமில்லை”

# ‘தமிழ் மொழியின் பண்பாட்டை வடவரில் சிலர்கூட அறியாததேன்?’

## ‘எல்லாத் துறைகளுக்கும் ‘தரம்’ குறைந்த இந்தி பயன்பட முடியுமா?’

### டாக்டர் சேது பிள்ளை கண்டனம்

தஞ்சை, ஏப். 12—

“வட இந்தியாவில் மிகச் சிலர்கூட பண்டைய மொழியான தமிழின் பண்பாடு பற்றி அறிந்து கொள்ளாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கூடியதாகும்.

“வடவரின் இந்தியை இலக்கியத் தன்மையில் பார்க்கையில், அது, தரம் குறைந்த மொழி என்பதையும், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளின் ஆதரவு இல்லாமல் இந்தி மட்டும் அரசாங்க மொழியாக எல்லா வேலைகளுக்கும் பயன்பட முடியாது என்பதையும் இந்தி ஆதரவாளர்கள் விரைவில் உணருவார்கள்,”

என்று, டாக்டர் சேதுப்பிள்[illegible] கரந்தை தமிழ்ச் சங்கத்தி[illegible] கையில் குறிப்பிட்டுள்ளா[illegible]

(5-ம் கலத் தொடர்ச்சி)

பிட்டு, ‘இஸ்கரா’ என்ற இதழில் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளதாம்.

முஸ்லிம்கள் அதிகப்படியாக வாழும் தென் ரஷ்யாவில் இந்த பத்திரிகை வெளியிடப்படுகிறது.

# நன்றியறிவிப்பு

★

நெல்லிக்குப்பம் தொகுதியில் தி. மு. கழகத்தவனுகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து வாக்களித்த வாக்காளர் பெருமக்கள் அனைவருக்கும், உழைத்த தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம் உரியதாகுக.

அன்பன்
**வெ. கிருஷ்ணமூர்த்தி**

★

பொதுத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் தி. மு. கழக சார்பில்போட்டியிட்ட எனக்கு பெருவாரியாக ஓட்டளித்துள்ள தாய்மார்களுக்கும், தோழர்களுச்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

நமக்கு வெற்றி கிட்டாமையால் வாட்டமுற்றத் தோழர்கள் அனைவரும் மனச்சோர்வு கொள்ளாமல் கழக வேலையில் ஈடுபட்டு, கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டுமென்பதை நினைவு படுத்துவதோடு, தோல்வியைக் கண்டு துவளாமல் புதிய கிளைக் கழகங்களைத் துவக்கவேண்டுமென தோழர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இரவு பகல் பாராமல் ஒத்துழைத்து தேர்தலில் வேலை செய்த தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

அன்பன்
**பொன். சொக்கலிங்கம்**

★

பொதுத் தேர்தலில் பவானி பொது தொகுதிக்கு தி. மு. க. [illegible]ர்பில் போட்டியிட்ட எனக்கு [illegible]யிரக்கணக்கான வாக்குகளை தந்து ஆதரித்த வாக்காளப் பெரியோர்களுக்கும் — தாய்மார்களுக்கும் எனது மனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இடையருது பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும் —கழக ஆதரவாளர்களுக்கும் —நண்பர்களுக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்று போல் என்றும் நான் இடையாது இயக்கப் பணியாற்றக் காத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்
**க. மா. சென்ருயன்**

★

சென்னை சட்டசபைத் தேர்தலில் சங்கரநயினர்கோவில் பொதுத் தொகுதிக்கு தி. மு. கழகச் சார்பில் போட்டியிட்ட எனக்குப் போதரவு தந்து, பலன் கருதாது நேர்மைக்கும் —நீதிக்கும் பாடுபட்ட பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும் நண்பர்களுக்கும், தாய்மார்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நாட்டிற்கும்—தொகுதிக்கும் என்றென்றும் தொண்டாற்ற காத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த நன்றியையும்— அன்பையும் காணிக்கையாக்குகிறேன்.

அன்பன்
**ஏ. வெள்ளத்துரை**

# சென்னை - கேரள ஐந்தாண்டுத் திட்டம்

## சில மாறுதல்கள்

புதுடில்லி, ஏப். 9—

புதிய மாநில அமைப்பின் காரணமாக சென்னை—கேரள மாநிலங்களின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மீண்டும் ஆராயப்பட்டுள்ளது.

பழைய சென்னை பகுதிகள் புதிய கேரளத்துடனும், பழைய திரு-கொச்சியிலிருந்து சில பகுதிகள் புதிய சென்னை மாநிலத்துடனும் இணைக்கப்பட்டுள்ளபடியால் ரூ. 19 கோடி கேரளத்திற்கு சென்னை தரவும், சென்னைக்கு கேரளம் ரூ. 4 கோடி அளிக்கவும் இசைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்த மாறுதல்களின் விளைவாக சென்னை மாநில இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 152,56,00,000-ம், கேரள மாநிலத் திட்டத்திற்கு ரூ. 87 கோடி செலவிடப்படுமென்றும் தெரியவருகிறது.

# ‘ரம்ஜான்’ பண்டிகைக்கு உண்ணு நோன்பு

பாரிஸ், ஏப். 12—

‘முஸ்லிம் பெருமக்கள் ஆண்டுக்கு ஒருமுறை ‘ரம்ஜான்’ பண்டிகையின்போது உணவு உட்கொள்ளாமல் உண்ணுநோன்பு இருப்பது மார்க்சியத்திற்கு விரோதமானது’ என்று குறிப்

(1-ம் கலம் பார்க்க.)

## வெற்றி விழா

13—4—57 மாலை 5 மணிக்கு தேர்தலில் வெற்றி பெற்ற கழகத் தோழர்களைப் பாராட்டுமுகத்தான், சென்னை—திருவொற்றியூர் கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில் வெற்றி விழாக் கூட்டம் தோழர் எஸ். ஜே. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், சி. வி. ஆடலழகன் பேசுவர்.

காலை 8 மணிக்கு மேற்படி மன்றத்தில் ஏழைகளுக்கு பாயாசம் வழங்குதலும், தோழர் இராதாமாணிக்கத்தின் (பக்க வாத்தியங்களுடன்) இன்னிசை விருந்தும் நடைபெறும்.

## கோவை—திருப்பூரில் பாராட்டுக் கூட்டம்

13—4—57 மாலை 6½ மணிக்கு திருப்பூர் தி. மு. கழகச் சார்பில், சென்னை—எழும்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி, திருப்பூர்—நொய்யல் நதிக்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர். தோழர் க. அன்பழகன் அவர்களும் கலந்துகொள்வார்.

## சென்னை 5-வது வட்ட இளங்கோ படிப்பகம்

13-4-57 மாலை 6 மணிக்கு மேற்படி படிப்பகத்தின் சார்பில் சொற்பயிற்சிக் கூட்டத் துவக்க விழா தோழர் டி. கே. பொன்னுவேலு தலைமையில் நடைபெறும். 'சுகாதாரம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

டில்லியின் சம்மதம் பெற்ற

## அமைச்சர் பட்டியல்

### கவர்னரிடம் காமராசர் சமர்ப்பித்தார்

புதுடில்லி, ஏப். 12—

சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காமராசர், நேற்று டில்லியில் நடைபெற்ற மத்தியக் காங்கிரஸ் பாராளுமன்ற நிறுவனக் கூட்டத்திற்குச் சென்றிருந்தார்.

தான் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அமைச்சர்கள் எண்ணிக்கை பற்றியோ, பெயர்களைப் பற்றியோ தான் எதும் கூறமுடியாது என்றும், டில்லி சென்று மேலிடத்துடன் கலந்து பேசிய பின்னரே அதுபற்றி அறிவிக்கப்படும் என்றும் நிருபர்களிடம் கூறியது நினைவிருக்கும்.

இப்போது டில்லியில், மேலிடத்தாரின் ஆதரவும் அனுமதியும் பெற்று காமராசர் சென்னை திரும்பிவிட்டார். அமைச்சர்களின் பட்டியலை கவர்னரிடம் சமர்ப்பித்தார்.

அமைச்சரவையில் மொத்தம் எட்டு பேர் இடம் பெறுவார்களாம். காமராசர் தலைமையில் பழைய அமைச்சர்களான பக்தவத்சலம், சுப்பிரமணியம், மாணிக்கவேலர், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக உள்ள கக்கன், செயலாளராக உள்ள இராமையா, மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வெங்கடராமன், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி லூர்து அம்மையார் ஆகியோர் அமைச்சர்களாகப் பணியாற்றுவர்.

உதவி அமைச்சர்கள் நியமனத்திற்கு இப்போது எதும் குறிப்பில்லை என்று தெரியவருகிறது.

நாளை காலை மந்திரிசபை பதவி ஏற்கும்.

## மண்டலக் குழுவிற்குக் கேரளப் பிரதிநிதிகள்

தென் மண்டலக் குழுவில் கேரளத்தின் பிரதிநிதிகளாக முதலமைச்சர் நம்பூதிரிபாட், நிதி அமைச்சர் அச்சுதமேனன், சட்ட அமைச்சர் கிருஷ்ணய்யர் ஆகியோர் இருப்பார்கள் என்று தெரியவருகிறது.

## கழகக் கூட்டங்கள்

★

### குணியமுத்தூர் :

மாரியம்மன் கோவில் திடல்

14—4—57 மாலை 7-மணிக்கு

தலைவர் : எம். கருப்பண்ணன்

பேசுவோர்:

கோபி. இராசு
மா. ரா. தமிழ்விழி
சு. ஆறுமுகம்
தங்கமாணிக்கம்

★

### திண்டுக்கல் :

எஸ். பி. திடலில்

14—4—57 மாலை 7-மணிக்கு

தலைவர்: பெரியார் க. வேலாயுதம்

பேசுவோர் ;

சிற்றுளி சுப்பிரமணியம்
என். முத்து
ஏ. சுப்பையா
கே. அங்குசாமி

★

### திருமங்கைச்சேரி

14—4—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : போ. தருமன்

பேசுவோர் :

கோ. சி. மணி
ஆ. முருகேசன்
ம. கோ. மணி
சிறுமி மு. இளங்கோ

★

### மடத்தூர் :

14—4—57 மாலை 6-மணிக்கு

தலைவர் : சற்குணம்

பேசுவோர் :

எம். எஸ். சிவசாமி
எப். ஏ. ஜோசப்
கே. தாளமுத்து

★

### சென்னை - நுங்கம்பாக்கம்

வள்ளுவர் திடலில்

13—4—57 மாலை 6½ மணிக்கு

தலைவர் : த. கிருட்டினன்

பேசுவோர் :

கண்ணதாசன்
சம்பந்தம்

### அம்பேத்கார் பிறந்தநின விழா—நினைவு மன்றத் திறப்பு விழா

14—4—57 காலை 9 மணியளவில் சென்னை—மகஜின்புரத்தில் விழாக் குழுவினர் சார்பில், தோழர் பக்கிரிசாமி பிள்ளை தலைமையில் பிறந்த தின விழா நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

தோழர்கள் எம். ஜே. வேலு மன்றத்தைத் திறந்துவைப்பார்; எம். சுந்தரராஜ் இயக்கக் கொடியேற்றுவார்; ஜீனராஜி புத்தர் படத்தைத் திறந்து வைப்பார்; ஆர். மாயகிருஷ்ணன் அம்பேத்கார் படத்தைத் திறந்து வைப்பார்.

### சென்னை- துனை 17-வது வட்ட தி மு. க. செயற்குழுஉறுப்பினர்கட்கு

14—4—57 காலை 10 மணியளவில் மேற்படி வட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

## உளுந்தூர்பேட்டை

### தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

18—4—57 வியாழன் காலை 10-மணிக்கு உளுந்தூர் பேட்டை-டிராவலர்ஸ் பங்களாவில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

—செயலாளர் தி. மு. க. உளுந்தூர்பேட்டை

### சென்னை 16-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம்

14-4-57 காலை 9 மணிக்கு மேற்படி வட்ட பொதுஉறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும்; கழக வளர்ச்சி குறித்து ஆராயப்படும்.

### சென்னை—புரசை 25-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு

14-4-57 காலை 8 மணிக்கு, புரசை-சரவணபெருமாள் முதலித்தெரு (ரோஜா லாண்டரி பக்கத்தில்) கழகப் பணிமனையில் மேற்படி வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; கழக ஆக்கவேலை குறித்து ஆராயப்படும்.

### சென்னை 36-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

14-4-57 காலை மேற்படி வட்ட தி. மு.கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் கழகப் பணிமனையில் (16, இரயில்வே பார்டர் ரோடு—கோடம்பாக்கம் இரயில்வே நிலயம் எதிரில்) நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### சென்னை 46-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

13—4—57 காலை 8 மணியளவில் மேற்படி வட்டக் கிளையின் செயற்குழு, திருவள்ளுவர் சாலையிலுள்ள கழகப் பணிமனையில் நடைபெறும்.

### பம்பாய்—மாதுங்கா தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு:

14—4—57 காலை 10 மணிக்கு மேற்படி கிளையின் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றக் கழகத் தோழர்களுக்கு வரவேற்பளிப்பது பற்றி முடிவெடுக்கப்படும்.


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## குளித்தலையில்

## வெற்றி விழா--வரவேற்புப் பொதுக்கூட்டம்

★

14—4—57 மாலை 6-மணிக்கு, குளித்தலையில் நடைபெறுகிற தி. மு. க. பொதுக்குழுவை யொட்டி கடம்பர்துறை அழகிரி சதுக்கத்தில் பொதுமக்கள் சார்பில் வெற்றிபெற்ற எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு நடைபெறும் வரவேற்பு விழாவில்

மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்

அண்ணா, இரா. நெடுஞ்செழியன்,

மற்றும் கழக முன்னணி வீரர்கள் பலரும் கலந்து கொள்வார்கள்.

—வெற்றிவிழா வரவேற்புக் குழுவினர், குளித்தலை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



எஸ். ஐ. ஏ. ஏ. லிமிடெட்,

## ஜாத்ப்ரோல் கால்பந்து போட்டி

இறுதி போட்டி (மறுவிளையாட்டு)

★

**விம்கோ** ஸ்போர்ட்ஸ் கிளப்

Vs

**தென் இரயில்வே** அத்லிடிக் அசோசியேஷன்

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில்

**13-4-57 மாலை 5-மணிக்கு நடைபெறும்**

இராமநாதபுரம் இராஜா அவர்கள் தலைமை வகிப்பார்


## அண்ணா

### சுற்றுப்பயணம்

★

ஏப். 13 : திருவள்ளூர் கலைக் கழகம்
14 : குளித்தலை
15 : காலை — மாயவரம் ;
,, மாலை — பொன்மலை திருச்சி
16 : பெரம்பலூர்
17 : நெல்லிக்குப்பம்
18 : விருத்தாசலம்
19 : தம்மம்பட்டி
20 : ஆரணி (வ. ஆ.)
21 : சென்னை

பொதுச்செயலாளர்

## இரா. நெடுஞ்செழியன்

### சுற்றுப்பயணம்

★

ஏப்ரல்
13 : சென்னை-இராயபுரம்
14 : குளித்தலை
15 : காலை—மாயவரம்
மாலை—பொன்மலை
இரவு—திருச்சி
16 : லால்குடி வட்டாரம்
17 : காலை — நெல்லிக்குப்பம்
மாலை—கடலூர்

துணைப்பொதுச்செயலாளர்

## என். வி. நடராசன்

### சுற்றுப்பயணம்

ஏப்ரல்
14 : குளித்தலை (பொதுக்குழு)
15 : திருச்சி
16 : திண்டுக்கல்
17 : நெல்லிக்குப்பம்
18 : காலை—உளுந்தூர் பேட்டை (கழக உறுப்பினர் கூட்டம்)
மாலை—கீரனூர் (திட்டக்குடி)
19 : கருங்குழி (செங்கற்பட்டு மாவட்டம்)
20 : வேளூர் (மீஞ்சூர்)

## மு. கருணாநிதி

### நிகழ்ச்சிகள்

ஏப். 12 : மருதூர்
14 : குளித்தலை
15 : திருச்சி
16 : குளித்தலை உயர் நிலைப்பள்ளி இலக்கிய விழா
17 : கடலூர் (குறிஞ்சிப் பாடி.

## க. அன்பழகன்

### சுற்றுப்பயணம்

ஏப். 13 : திருப்பூர்
14 : குளித்தலை
15 : மாலை—பாகனேரி
இரவு—சிவகங்கை

### சென்னை—காசிமாநகர் உதயசூரியன் இளைஞர் மன்றம்

13-4-57 காலை 9 மணிக்கு மேற்படி மன்ற துவக்கவிழா தோழர் என். சிவரத்தினம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் சொற்பொழி[illegible]வர்; விழாவில் குழந்தை[illegible] இனிப்பு வழங்கப்படும்.

மாயூரம் தொகுதி

## தி. மு. க. தேர்தல் வழக்கு நிதி

### சிறப்புக் கூட்டம்

★

**15—4—57** காலை 9-மணிக்கு மாயூரம் இரயிலடி சண்முகா டாக்கீசில்

பேசுவோர் :

## அண்ணா

## இரா. நெடுஞ்செழியன்

குடவாசல் கிருஷ்ணமூர்த்தி

நன்கொடை : ரூ. 10, 5, 2, 1.
பெண்கள் (தரை) அணா 8.

## சிறப்புக் கூட்டம்

★

13—4—57 காலை 9-மணிக்கு கோகலே மண்டபத்தில்

★

நடிகர் என். எஸ். நாராயணன் தலைமையில்

புரட்சி நடிகர்

**எம். ஜி. ராமச்சந்திரன்**
—'கலைஞனின் நாட்டுப் பற்று'

**கண்ணதாசன்**
—'கவிஞனும் காதலும்'

என்ற தலைப்புகளில் பேசுவர்.

**எஸ். எஸ். தென்னரசு**
**அலமேலு--அப்பாதுரை**
ஆகியவர்களும் பேசுவர்.

★

நன்கொடை : ரூ. 1; அணா 8,

குறிப்பு :—37-வது வட்ட தி. மு. க. பணிமனையில் மாலை 6-மணி முதல் இரவு 9-மணி வரையில் நுழைவுச் சீட்டுகள் கிடைக்கும்.

—பெண்கள் படிப்பகம், இராயப்பேட்டை.

### மக்கள் முன்னேற்ற மன்றம் திறப்பு விழா

13—4—57 மாலை 5½ மணிக்கு சென்னை—இராயபுரம், மார்க்கெட் சந்தில் மேற்படி மன்றத்தை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்துவைப்பார். தோழர்கள் காஞ்சி-கலியாணசுந்தரம், வே. திருநாவுக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

### தமிழரசுக் கழகம் நேரடியாகப் போட்டியிடும்?

வேலூர், ஏப். 12—

'வருகின்ற உள்ளாட்சிக் கழகத் தேர்தலில் தமிழரசுக் கழகம் நேரடியாகப் போட்டியிட முடிவு செய்திருக்கிறது,' என்று மாநில தமிழரசுக் கழகச் செயலாளர் குப்புசாமி, சென்னையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திற்குச் சென்று திரும்பியதும் கூறியதாகத் தெரிகிறது.


திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ